பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 05 | செவ்வாய்க்கிழமை | 18.06.2024 | அதிர்வு 322

அநுராதபுரத்தில் இருந்து

## குருந்தூர் விகாரைக்கு பிக்குகள் பாதயாத்திரை

(ந.லோகதயாளன்)

குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்கு அநுராதபுரத்தில் இருந்து 06▶

சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடும்

# பொம்மை ஆட்சியே இந்த நாட்டில் உண்டு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



"சர்வதேச நாணய நிதியம் சொல்வதை எல்லாம் செய்வதற்கு இந்த அரசுக்கு மக்கள் ஆணை வழங்கப்படவில்லை. அரசு வினைதிறன் மிக்கதாக இருந்தால், மக்களுக்காக நல்லதொரு உடன்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறான எதுவும் நடக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடும் பொம்மை ஆட்சியே நாட்டில் உள்ளது. இந்த அரசு வரிச் சுனாமியை மக்களின் தோள்களில் சுமத்தியுள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 06▶

பாலங்களைக்கூட நிர்மாணிக்க முடியாத

## இனவாத அரசு தமிழருக்கு எவ்வாறு தீர்வை வழங்கும்?

இப்படி ரவிகரன் கேள்வி




சாதாரணமாக எமது தமிழர் பகுதிகளிலுள்ள பாலங்களைக்கூட நிர்மாணிக்க முடியாத இந்த இனவாத அரசு, எவ்வாறு தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கும் என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு – வட்டுவாகல்பாலத்தின் தற்போதைய நிலை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் 06▶




பல குடும்பங்களிலும் சில்லெடுக்கும் பெரிய விவகாரமாக மாறி இருப்பது ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும்ஒருமாணவன் ஒரு வீட்டில் இருந்தால் போதும். முதல் வருடத்தில் இருந்தே வீடு களேபரப்பட்டு போகும். மாணவன் படும்பாடு சொல்லி மாளாது.

இத்தகைய நெருக்கடியுடன், தற்போதைய நிலையில் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் பிள்ளைகளின் கல்வி மதிப்பீடுகளை தொடர முடியாது எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், 30 வீதப் புள்ளிகள் அந்த மாணவனின் 4 மற்றும் 5 ஆம் தரங்களில் உள்ள 06▶




# சட்டமா அதிபரின் பதவி காலத்தை நீடிப்பது அரசமைப்புப் பேரவையின் பொறுப்பு அல்ல!

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

“சட்டமா அதிபரின் பதவி காலத்தை நீடிப்பது குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு அரசமைப்புப் பேரவைக்கு கிடையாது.அரசமப்புப் பேரவையை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் ஜனாதிபதி செயற்படுகிறார்.”

– இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் பொருளாதாரம் இன்றும் கத்தி முனையில் தான் உள்ளது எனச் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுகிறது. வங்குரோத்து நிலைக்குப் பின்னர் வெளிநாட்டுக் கடன் செலுத்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அரசமுறை கடன் செலுத்தாத காரணத்தால் சேமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கையிருப்பைக் கொண்டு அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆகவே பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்காலிகமான ஓய்வு மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளன.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் எடுத்த தீர்மானங்களினால் நடுத்தர மக்கள் மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஊழல் ஒழிப்பு குறித்து அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவில்லை. மக்களை நெருக்கடிக்குள்ளாகி அறவிடப்படும் வரி முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை,

பாதுகாக்கப்படுவதில்லை.

அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். நிதி இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டதை போன்று ஜனாதிபதி தேர்தலை பிற்போட முடியாது. இன்னும் 30 நாள்களில் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பை விடுக்க வேண்டும்.

அரசமைப்புப் பேரவை இன்று செவ்வாய்க்கிழமை அதன் தலைவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை நீடிப்பது குறித்து ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரை இன்று பரிசீலனை செய்யப்படவுள்ளது.

அரசமைப்பின் 41 ஆவது உறுப்புரையின் பிரகாரம் உயர் பதவி நியமனங்களுக்காக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அனுமதித்தல் அல்லது மீளாய்வு செய்தல் அரசமைப்பு பேரவையின் பொறுப்பாகும். பதவிக் காலத்தை நீடிப்பதை அனுமதிப்பதும் அல்லது ஆராய்வதும் பேரவையின் செயற்பாடல்ல.

இலங்கை அரச நிர்வாக கட்டமைப்பில் இதுவரை 47 சட்டமா அதிபர்கள் பதவி வகித்துள்ளார்கள். இவர்களில் ஒருவரது பதவிக் காலம் ஒரு நாள் கூட நீடிக்கப்படவில்லை. பதவிக்காலம் நிறைவடைந்ததும் அவர்கள் முறையாகச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்கள். தற்போதைய சட்டமா அதிபர் சஞ்ஜய் ராஜரட்ணம் 48 ஆவது சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை மேலும் 06 மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி ஏன் அக்கறை கொள்ள வேண்டும்?

பதவிக் காலம் நிறைவடைந்தவரின் பதவிக் காலத்தை நீடிக்கும் போது அந்த நபர் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சார்பாகச் செயற்படுவார். சட்டமா அதிபர் பதவி இன்றியமையாதது. ஜனாதிபதியின் செயற்பாடுகளினால் சட்டமா அதிபர் பதவி மீதான மக்கள் நம்பிக்கை சிதைவடையும். சட்டமா அதிபர் திணைக்களத்தையும் ஜனாதிபதி தனது அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்.”– என்றார்.

# 75 ஆயிரம் சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கொழும்பில் இளைஞர் ஒருவர் சிக்கினார்

சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கொழும்பு – மாளிகாவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 75 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதையடுத்து சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.



# யாழில் கடலட்டை உற்பத்தியில் மேம்பாடு சீனர்கள் எவருமே அதற்காக இங்கில்லை!

## தெளிவுபடுத்துகின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கிடைக்கின்ற வாய்ப்புக்களை சாதகமாகப் பயன்படுத்தி எமது மக்களை வலுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகவே கடலட்டை உற்பத்தி அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடலட்டைப் பண்ணையாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ் மாவட்டத்தில் சீனர்கள் கடலட்டை பண்ணை தொழிலில் ஈடுபடுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் அண்மையில் தெரிவித்த கருத்தை கோடிட்டுக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது கடலட்டை தொடர்பான தொழிலில் ஈடுபடுவதற்கு யாழ் மாவட்டத்தில் சீனர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நல்லாட்சியில் கடலட்டை குஞ்சு உற்பத்திக்காக அனுமதிக்கப்பட்ட சீன நிறுவனமும், தற்போதை வல்லாட்சி காலத்தில் வெளியேற்றப்பட்டுள்ளதுடன், நூறு வீதம் யாழ் மாவட்டத்தினை சேர்ந்தவர்களே யாழ்ப்பாணத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மேலும் சிறப்பான பொருளாதார நன்மைகளை வழங்கி வரும் கடலட்டை உற்பத்திகளை மேலும் விரிவாக்கம் செய்து முன்கொண்டு செல்வதற்கு, பண்ணையாளர்கள் நடைமுறை ரீதியாக உணர்ந்து கொண்ட சவால்களுக்கு தீர்வு கிடைக்க வழிவகை செய்யப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் சுதாகரன், நெக்டா நிறுவனத்தின் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் நிருபராஜ், வேலணை பிரதேச செயலர் சிவகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது கடலட்டை பண்ணையாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை கருத்திற் கொண்ட அமைச்சர் தமது உரையில் கூறியவை வருமாறு:-

பொய்களுக்கு மக்கள் இடங்கொடுக்காது, வெளிப்படையான உண்மைகளை இனங்கண்டு, எதிர்காலத்தை வெற்றிகொள்ள வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு அவசியமானதுமாகும்.

எமது மக்களே எமது பிரதேசங்களின் வளங்களைப் பயன்படுத்தி உச்சப் பயன்களைப் பெறவேண்டும். அதுவே எனது எதிர்பார்ப்புமாகும்.

கடந்தகாலத்தில் தவறான வழிநடத்தல்களும் உணர்ச்சி பேச்சுக்களும் பெற்றுத்தந்தது அழிவுகளையும் வடுக்களையும் மட்டும்தான். இனி ஒருபோதும் அந்த நிலைக்கு எமது இனம் சென்றுவிடக்கூடாது.

1987 இல் தாம்பாளத்தை வைத்து தரப்பட்ட '13 ஐ" கைநழுவ விட்டுவிட்டு இன்று வெட்கம் கெட்டதனமாக அதை முழுமையாக தருவீர்களா, பாதியாக தருவீர்களா எனத் தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இதேநேரம் தமிழ் பொது வேட்பாளர் விடயம் என்பதும் தேவையற்ற ஒன்றாகத்தான் நான் கருதுகின்றேன். ஆனால் தற்போது தேர்தல் வரவுள்ளதால் ஐக்கியம் என்ற போர்வைக்குள் தம்மை போர்த்திக்கொள்ள கடும் பிரயத்தனங்களை தேசியம் பேசும் தமிழ் தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்கான ஏற்பாடே இந்த பொது வேட்பாளர் பேச்சும் இருக்கின்றது.

இதேநேரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை பொறுப்பெற்று அதைப் படிப்படியாக முன்னேற்றம் காணச் செய்துகொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் சரியானவையாகவே இருக்கின்றன என நான் எண்ணுகின்றேன்.

அதனால் வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவரை வெற்றியடையச் செய்வதே தமிழ் மக்களுக்கு நல்லதென் நான் நினைக்கின்றேன்.

இந்நிலையில் வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸநாயக்கா ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து சென்றுள்ளனர்.

இன்று அனைத்தும் கைமீறிச்சென்றுவிட்ட நிலையில் அவர்களிடம் பதின்மூன்றா, அதில் பாதியா அல்லது கால் வாசியா எனப் பேசிக்கொண்டிருக்கின்றனர்

ஆனால் அது எமது கைகளில் ஏற்கனவே இருக்கின்றது

இதேவேளை எதனையும் தேசிய நல்லிணக்கம் மற்றும் சலசலப்பற்ற பொறி முறைகளூடாக சாதிக்கலாம் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. அவ்வாறு நாம் பலவற்றை சாதித்தும் காட்டியிருக்கின்றோம்.

எனவே அடுத்துவரும் காலங்களில் எமக்கு மக்கள் பலம் மேலும் அதிகளவாக கிடைக்கும் பட்சத்தில் இன்னும் அதிகளவான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. - என்றார்.





# 38 வருடங்களாகத் தாம் இருந்து பணியாற்றிய கதிரையை வணங்கி விடை பெற்ற மருத்துவர்!

## பொகவந்தலாவையில் மனதை நெருடும் பிரியாவிடை

(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)

பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் 38 வருட காலம் வைத்திய சேவையில் இருந்த வைத்தியர் எம். பரமேஸ்வரன் இவ்வளவு காலம் தான் அமர்ந்து பணிசெயத்த கதிரையை வணங்கி நேற்றுத் திங்கள் கிழமை விடை பெற்றார். நேற்றோடு அவர் பணியிலிருந்து ஓய்வுபெற் றார்.

இவர் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் 30 வருடகாலமும், வலப்பனை மற்றும் அக்கரபத்தனை ஆகிய வைத்தியசாலைகளில் 08 வருடங்களுமாக 38 வருடங்கள் தனது வைத்திய சேவையில் மக்களுக்கு சிறந்த முறையில் முன்னெடுத்திருந்தார்

அந்த வகையில் நேற்றையதினம் பொகவந்தலாவ வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயா ளர்களுக்கு சமைத்த உணவு பொதிகளையும் அவர் வழங்கி வைத்தார்.

இதேவளை பொகவந்தலாவ சமுகசெயற்பாட்டாளர்களி னால் எம். பரமேஸ்வரன் வைத்தியருக்கு பொன்னாடை போற்றி நினைவு பரிசு ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.









# பொருளாதாரம் 5.3 வீதத்தால் முதல் காலாண்டில் வளர்ச்சி!



இந்த வருடத்தின் முதல் காலாண் டில் நாட்டின் பொருளாதாரம் 5.3 சத வீதத்தினாலும் கைத்தொழில் துறை 11.8 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித் துள்ளார்.

அத்துடன், 2022 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம் 12 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் 2.2 சதவீத்தினால் வளர்ச்சி யடையும் என எதிர்பார்ப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



# தேசிய மக்கள் சக்தியின் லண்டன் மாநாடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

லண்டன் சென்றிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான அநுர குமார திஸநாயக்கா கட்சியின் லண்டன் மாநாட்டில் பங்குபற்றினார்.

லண்டன் மாநாடு, இலங்கையரின் ஒன்றிணைந்த ஆட்சி மாற்றத்துக்கான சிறந்த காட்டியாக அமைந்ததிருந்தது என அக்கட்டமைப்பு வட்டாரங்கள் திருப்தி தெரிவித்தன.












## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வகுப்பறை வேலைகளில் இருந்து பெறப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

குறைந்தது 30 வீதத்துக்கான பரீட்சைக்குரிய மதிப்பெண்களை இரண்டு வருடங்களில் மாணவன் பெற்றிருக்க வேண்டும் என்றும், ஆசிரியர்களால் நடத்தப்படும் தேவையான மதிப்பீடுகள் மூலம் இது பெறப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாத்தாண்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இனி என்ன? வகுப்பறைகளில் மாணவர்களின் மதிப்பெண்களைத் தீர்மானிக்கும் ஆசிரியர்கள் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுதான். பெற்றோர்களின் பாய்ச்சலுக்கும் காய்ச்சலுக்கும், ஏச்சுகளுக்கும் பேச்சுகளுக்கும் வகுப்பறை ஆசிரியர்கள் உள்ளாக வேண்டியதுதான்...!

\+ \+ \+

இலங்கையில் ஜனத்தொகைப் பெருக்க வீதத்தில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 5 வருடங்களில் ஒரு லட்சத்திற்கும்கும் அதிகமான பிறப்புகள் குறைவடைந்துள்ளன என மகளிர் மற்றும் மகப்பேறியல் வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் உயிரிழப்பவர்களின்களின் எண்ணிக்கையும் கணிசமானளவு அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒருபுறம் பிறப்பு வீதம் வீழ்ச்சி. மறுபுறம் இறப்பு வீதம் அதிகரிப்பு.

இந்த நிலையில், முதியோர் சமூகம் அதிகரிப்பதன் மூலமும், இளம் சமூகம் குறைவதன் மூலமும் நாட்டில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படக்கூடும் எனவும் வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2017 ஆம் ஆண்டு இந்த நாட்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 25 ஆயிரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 47 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது.

இதேநேரம் 2017ஆம் ஆண்டில் வருடாந்த இறப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்து 40 ஆயிரமாக காணப்பட்ட நிலையில், 2023 ஆம் ஆண்டில் அது ஒரு லட்சத்து 80 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

கடந்த 5 வருடங்களாக மகளிர் மற்றும் மகப்பேறியல் வைத்தியர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையால், எதிர்காலத்தில் நாட்டின் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படக்கூடும் எனவும், இதன் காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்படும் எனவும் மகளிர் மற்றும் மகப்பேற்று வைத்தியர் சனத் லனரோல் தெரிவித்துள்ளார்.

## பொம்மை ஆட்சியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 243 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கொழும்பு, கெஸ்பேவ, இரத்தினபிட்டிய ஆனந்த புதிய மாதிரி கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது நாட்டின் இறையாண்மையை நாங்கள் யாருக்கும் விற்கவில்லை. நல்ல நிலையில் இருந்து, நல்லதொரு கலந்துரையாடலுக்குச் சென்றால் மக்கள் தரப்பில் செய்ய வேண்டியதை சரியாகச் செயற்படுத்த முடியும். மக்களின் அழுத்தத்தைக் குறைத்து, மக்களின் அசௌகரியங்களைக் குறைப்பதன் மூலம், ஒடுக்குமுறையான மக்கள் வாழ்க்கையை உருவாக்காமல் நல்ல ஆக்கபூர்வமான உடன்பாட்டை எட்ட முடியும். என்றாலும், இன்று பொம்மை அரசே காணப்படுகின்றது. இது இந்த யுகத்தின் அவலமாகும்.

இன்று சமூகத்தில் மீள முடியாத அழுத்தம் உருவெடுத்து மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மக்கள் வறுமையில் வாடினாலும் வரிக்கு மேல் வரி விதிக்கும் வரிச் சுனாமி விதிப்பது நின்றபாடில்லை. சர்வதேச நாணய நிதியம் கூறியதாக வாடகை வீட்டுக்கும் வரி விதிக்கும் சூத்திரத்தை அரசு உருவாக்கி வருகின்றது." – என்றார்.

## குருந்தூர் விகாரைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பௌர்ணமியை முன்னிட்டுப் பாதயாத்திரை நடைபெறவுள்ளது.

அநுராதபுரம் பகுதியில் உள்ள பௌத்த பிக்குவின் ஏற்பாட்டில் பௌத்த பிக்குகள் உள்ளிட்டவர்களின் பெரும் பாதயாத்திரை இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு பகுதியில் உள்ள குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்கே பௌர்ணமி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி அநுராதபுரத்தில் இருந்து இந்தப் பாதயாத்திரை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் பொங்கல் உற்சவம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தப் பாதயாத்திரையும் இடம்பெறவுள்ளது.

# அம்பாறை விபத்தில் இளைஞர் ஒருவர் பலி

அம்பாறை, பதியத்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்டபதியத்தலாவ-கோமானை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கோமானையிலிருந்து பதியத்தலாவ நோக்கிப் பயணித்த வான் ஒன்று பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது பாதசாரி படுகாயமடைந்துள்ள நிலையில் பதியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை, பதியத்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து சந்தேகநபரான வான் சாரதி தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதியத்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இனவாத அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"முல்லைத்தீவு – யாழ்ப்பாணத்துக்கான ஏ – 35 பிரதான வீதியில் இந்த வட்டுவாகல் பாலம் காணப்படுகின்றது.

கடந்த 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியளவில் கட்டப்பட்டதாக அறியப்படுகின்ற இந்த வட்டுவாகல் பாலமானது, 70 வருடங்களுக்கும் அதிகமான பழமை வாய்ந்த பாலமாகும்.

குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போர்க் காலத்தில் அதிகம் பேசப்பட்ட பாலமாக இந்தப் பாலம் காணப்படுகின்றது.

இறுதிப் போர்க் காலத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையிலிருந்து எஞ்சிய மக்கள் இந்த வட்டுவாகல் பாலத்தின் வழியாகவே வெளியேறியிருந்தனர். அந்தவகையில் இங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்ற பாலமாக இந்த வட்டுவாகல் பாலம் காணப்படுகின்றது.

போரின் பின்னரான சூழலில் எமது தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பு, மதத் திணிப்பு, கடலில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இதனால் இங்குள்ள தமிழ் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். அதே போல் இவ்வாறான மிகமுக்கியமான பாலங்கள் சீரின்மையாலும் எமது தமிழ் மக்கள் பாரிய போக்குவரத்துப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறான பழமை வாய்ந்த பாலங்களைப் புதிதாக அமைத்துத் தராமல், இங்குள்ள தமிழ் மக்களைத் தொடர்ந்தும் போக்குவரத்துப் பாதிப்புக்களுக்கு உள்ளாக்க வேண்டும் என இந்த இனவாத அரசு செயற்படுவதாகவே எம்மால் பார்க்க முடிகின்றது.

குறிப்பாக தற்போது பழமையான இந்தப் பாலம் அடிக்கடி உடைவதும், போக்குவரத்துத் தடை ஏற்படுவதும், பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் சீரமைப்புச் செய்யப்படுவதுமாக இந்தப் பாலத்தின் நிலை காணப்படுகின்றது.

அதேவேளை, ஒரு வழிப் பாதையாக மிகவும் ஒடுங்கிய பாலமாக இந்தப் பாலம் காணப்படுகின்றது. இதனால் ஒரு கரையிலிருந்து வாகனங்கள் வரும் வரை, மறுகரையிலிருக்கின்ற வாகனங்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது." – என்றார்.

We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

Walk-in-interview on 22-06-2024
between10.00 am to 12.00 noon



**IIS CITY CAMPUS**
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 |077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS



Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வேண்டும் என்றே விடப்பட்ட தவறு

அரசமைப்பில் விடப்பட்ட ஒரு தவறைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது தற்போதைய பதவிக்காலத்தை இன்னும் ஒரு வருடத்திற்கு சுலபமாக நீடிக்க முடியும்எனசிலசட்டவட்டாரங்கள்சுட்டுகின்றன. அதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.

2015 ஜனவரியில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய எதிரணியின் பொது வேட்பாளராகக் களம் இறங்கிய மைத்திரிபால சிறிசேன, அதுவரை ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து ஜனாதிபதியானார். அச்சமயத்தில் ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாக இருந்தது. அதனை ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் ஏற்பாடு 28 ஏப்ரல் 2015 இல் நிறைவேற்றப்பட்ட 19ஆவது அரசமைப்பு திருத்தினால் கொண்டுவரப்பட்ட போது அரசமைப்பில் ஒரு தவறு விடப்பட்டதாகக் கூறப்பட்டது.

அது தவறுதலாக விடப்பட்டதா அல்லது வேண்டுமென்றே அப்படி விடப்பட்டதா என்று கேள்வி இப்போது எழுகின்றது.

19ஆவது திருத்தத்துக்கு முன்னர் வரை ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகவே இருந்தது. அது வரையில், ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஜனாதிபதியின் பதவிகாலத்தை நீடிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற வேண்டும் என்றே அரசமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசமைப்பின் 83 (ஆ) சரத்து இது குறித்து விவரித்திருந்தது.

எனினும் 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளாக குறைக்கும் திருத்தம் கொண்டுவரப்பட்ட போது இந்த 83 (ஆ) சரத்தில் 'ஆறு ஆண்டுகளுக்கு மேல்' என்பது 'ஐந்து ஆண்டுகளுக்கு மேல்' என்று மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 83 (ஆ) சரத்து அப்படி மாற்றம் ஏதும் செய்யப்படாமல் அப்படியே விடப்பட்டது.

இது கவனிக்காமல் விடப்பட்ட தவறாக இப்போது சில வட்டாரங்கள் கூறினாலும், அது தெரிந்தே - வேண்டுமென்றே - அப்படி விடப்பட்டது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் முணுமுணுக்கின்றன.

இந்த 83 (ஆ) பிரிவு அரசமைப்பில் இருக்கும் வரை 6 ஆண்டுகளுக்கு மேல் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதாயின் என்றால் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற வேண்டிய தேவை ஏற்படும் என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி ஒருவரின் தற்போதைய ஐந்து வருட ஆட்சி காலத்தை ஆறு வருடத்திற்கு உட்பட்ட ஒரு காலத்துக்கு நீடிப்பதற்கு வெறுமனே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் ஓர் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் - சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறாமலேயே - அதை சுலபமாக சட்டமாக்க முடியும். இதுதான் இப்போதைய நிலைமை.

இந்த 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட சமயம், அந்தத் திருத்த விவகாரத்தை முன்னெடுத்துக் கையாண்ட நல்லாட்சி அரசு தரப்பின் உயர் மட்டங்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கும் இடையில் நல்லுறவு இருந்தது. அன்னியோன்யம் நிலவியது. நல்லாட்சித் தரப்புக்குள் நல்லுறவு நீடித்தது.

19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட இருந்தது. அந்தப் பொதுத்தேர்தலின் மூலம் நல்லாட்சி அரசை வலிமையாக நிறுவி, அதன் கீழ் புதிய அரசமைப்பை உருவாக்கும் திட்டமும் அப்போது முகிழ்த்திருந்தது.

பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு காலம் இழுபட்டால், அப்போது ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டிய தேவை ஏற்படலாம், அத்தகைய சந்தர்ப்பத்தில் மைத்திரியின் பதவிக்காலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் அரசமைப்பு திருத்தம் ஒன்றின் மூலம் நீடிக்கும் வாய்ப்பாகவே, இந்த ஏற்பாடு மாற்றப்படாமல் அப்படியே விடப்பட்டதாக இப்போது கூறப்படுகிறது.

ஆனால் துரதிஷ்டவசமாக, தன்னைப் பதவிக்குக் கொண்டு வந்தவர்களுடன் முரண்பட்டு அந்த வாய்ப்பை மைத்திரி இழந்து போனார். ஆயினும், அவருக்காக அந்த வாய்ப்பை அப்போது ஒரு திறப்பாக அரசமைப்பில் வைத்திருந்த சூத்திரதாரி ரணிலுக்கு அது நன்கு தெரிந்திருந்தது. இப்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைத் திரட்டும் தந்திரம் அவருக்கு இருக்கும் என்றால் சுலபமாக தமது பதவிக்காலத்தை மேலும் ஓர் ஆண்டுக்கு அவர் நீடித்து விடுவார் என்பதுதான் நிலைமை.






# ஈரலிப்பான நிலையங்கள் தொடர்பான சர்வதேச மாநாடு கொழும்பில் ஆரம்பம்

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் முதலாவது ஈரலிப்பான நிலம் மற்றும் ஈரலிப்பான நிலையங்கள், சுற்றுலாத்துறை பொருளாதாரம் றநவ டயனெ யனெ றநவடயனெ நுஉழ வுழரசளைஅ என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு நேற்று பத்தரமுல்லையில் உள்ள வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் காலை அமர்வை இலங்கையின் பிரதமர் தினேஷ் குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை, ஜப்பான். கொரியா, இந்தியா, மலேசியா, ஜோர்தான், ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், பங்களதேஷ், பாகிஸ்தான் உட்பட 15 நாடுகளின் சுமார் நூறு பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்கின்றனர். இம் மாநாடு இலங்கையில் 5 நால்கள் மேற்படி தலைப்பில் நாட்டின் பல்வேறு தளங்களில் நடைபெறுகின்றது.

இலங்கை உட்பட ஆசியா, உலக நாடுகளின் கால நிலை மாற்றம், ஈரலிப்பான நிலங்கள், பச்சை பசும் தாவரம் கொண்ட நிலங்கள், சுற்றுலாத்துறையை கவரக்கூடிய இயற்கை வளங்கள், நிலங்களை பாதுகாத்தல் ஆகிய அம்சங்களை ஒட்டி இந்த மாநாடு நடைபெறுகின்றது. இதில் வெளி ஏசியா ஓசியானிக் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் தத்தமது நாடுகளின் ஈரலிப்பான அல்லது பசுமைத் தாவர நிலங்கள் பற்றிய தமது ஆய்வுகளை முன்வைப்பார்கள்.

இம்மாநாட்டை ஆரம்பித்து உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்த்தன –



எமது நாட்டின் பசுமை நிலங்கள், நகரங்கள் போன்றவை நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் தலைமையின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அந்த அமைச்சின் கீழ் காணி மீட்பு கூட்டுத்தாபனம் என்னும் அதிகார சபையும் உள்ளது. கொழும்பு ,மகரகம, கடுவலை, தெஹிவளை – கல்கிசை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை போன்ற நகர சபைகள் 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவாறே எதிர்காலத்திலும் நீடிக்க, ஈரலிப்பான நிலங்கள், பசுமையான தாவரங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அண்மைக்காலத்தில் இலங்கையில் முக்கிய பொருளாதாரத்தில் வருமானமாக சுற்றுலாத்துறை மேலோங்கி நிற்கிறது. 15 நாடுகளில் இருந்து இலங்கை வந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகள் இத்துறையில் சிறந்த அறிவையும் ஆராய்ச்சியும் இலங்கை உட்பட ஆசிய மற்றும் ஆஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகள் அறிவுத்திறன்களை அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுப்போம். – எனக் குறிப்பிட்டார்.












# கிராமோதய சுகாதார நிலையம் மூதூர் பெரியபாலத்தில் திறப்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் பெரியபாலத்தில் 16 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமோதய சுகாதார நிலையத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தது, மக்கள் பாவனைக்காகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அதுகோரல மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துக் கொண் டனர்.






# எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை அதிகரிக்கக் கூடும்



எதிர்காலத்தில் இறக் குமதி செய்யப்படும் சகல பொருள்களினதும் விலை அதிகரிக்கக் கூடும் என அகில இலங்கை சிறு கைத்தொழில்துறை சங் கம் தெரிவித்துள் ளது.

அந்த சங்கத்தின் தலைவர் நிலுக்ஷ குமார இதனைத் தெரிவித்துள் ளார்.

கப்பல் கட்டண அதிக ரிப்பு உள்ளிட்ட செலவி னங்கள் காரணமாகவே இறக்குமதி செய்யப்படும் சகல பொருள்களினதும் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுபான்மைச் சமூகங்களினது ஒட்டுமொத்தப் பிரதிநிதியாக இன்று தமிழ்ப் பேசும் சிறுபான்மையினரின் பொது வேட்பாளரே அவசியம்!

## புதிய வியூகத்துடன் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கருத்து

(த. தர்மேந்திரா)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தி நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம், மலையக சிறுபான்மை சமூகங்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாக தமிழ்ப் பேசும் சிறுபான்மைப் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்று உற்பத்தி திறன் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை வழங்கிய செய்தி குறிப்பில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வரவுள்ள ஜனாதிபதி தேர்தல் பேசுபொருளாக மாறியிருக்கின்றது. பெருந்தேசிய கட்சிகளின் உத்தேச வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியவற்றுக்கு வந்து சிறுபான்மை சமூகங்களின் ஆதரவைக் கோரி நிற்கின்றனர்.


இத்தேர்தல் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவுக்கு மிக பிரமாண்டமான போட்டியாக விஸ்வரூபம் எடுக்க இருக்கின்றது. எந்தவொரு வேட்பாளரும் தனிபெரும்பான்மையுடன் வெற்றி பெறுவது என்பது கல்லில் நார் உரிப்பது போல கடினமாக இருக்கும்.

அதற்கும் அப்பால், எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீத வாக்குகளை பெற வேண்டுமாயின் உச்ச பட்ச பகீரத பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கும் என்றால் மிகையாகாது.

இலங்கையில் சிறுபான்மை சமூகங்களில் இருந்து ஜனாதிபதி ஒருவர் தோற்றம் பெற முடியாது. ஆனால் ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கின்ற சக்தியாக சிறுபான்மை சமூகங்கள் மாற முடியும்.

அதற்கான வாய்ப்பு வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கண் முன் தெரிகின்றது. எனவே இவ்வாய்ப்பை சரியான தருணமாக பயன்படுத்தி தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் ஒட்டுமொத்த பிரதிநிதியாக தமிழ் பேசும் சிறுபான்மை பொது வேட்பாளர் ஒருவரை தேர்தலில் நிறுத்த வேண்டும்.

அவர் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் வென்றவராக விளங்க வேண்டும். நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் நீண்ட



அரசியல் அனுபவம், நிறைந்த ஆற்றல் மிக்கவராக அவர் திகழ வேண்டும்.

சிங்கள முற்போக்கு சக்திகளின் ஆதரவை பெற கூடியவராகவும் இருக்க வேண்டும். இவ்வாறான ஒரு தமிழ் பேசும் சிறுபான்மை பொது வேட்பாளரை தேர்தலில் நிறுத்துவது தொடர்பாக சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பொதுநல செயற்பாட்டாளர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்க்கமான, தீர்க்கதரிசனமான தீர்மானத்தை எட்ட வேண்டும்.

தமிழ் பேசும் சிறுபான்மை பொது வேட்பாளருக்கு சிறுபான்மை சமூகங்களின் மக்களாணை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த வியூகம் காலத்தின் கட்டாயம் ஆகும். இந்த வியூகத்தின் வெற்றி மூலமாக அரசமைப்பு நெருக்கடியை உருவாக்கி எதிர்காலத்தில் சிறுபான்மை சமூகங்களுக்கான உரிமைகள், இருப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை வென்றெடுப்பதற்கும், தக்க வைப்பதற்குமான மார்க்கத்தில் முன்னோக்கி பயணிக்க வேண்டும்.

போருக்கு பின்னரான இலங்கையில் சிறுபான்மை தேசிய இனங்களை அரசியல் அடிப்படையில் இணைப்பதற்கான பான்னான வரலாற்று வாய்ப்பாகவும் இத்தேர்தலை பயன்படுத்த வேண்டியுள்ளது. - என்று உள்ளது.

# வடக்கு சுகாதார அமைச்சராக அரும்பணியாற்றிய மருத்துவர் சத்தியலிங்கத்துக்கு அமைச்சு பாராட்டு

## அவர் முன்முயற்சியால் சாத்தியமான சுகாதார அபிவிருத்தி





மருத்துவர் சத்தியலிங்கம் வடக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சராக கடமையற்றிய போது நெதர்லாந்து நாட்டிலிருந்து ரூபா 2,400 கோடி(60 மில்லியன் யூரோ) நிதியை வடக்கு மாகாண சுகாதார அபிவிருத்திக்காக பெற்றுக்கொடுத்ததை பாராட்டி கௌரவிக்குமுகமாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நிகழ்வொன்றை நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தது. அந்நிகழ்வில் வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

அந்த நிதியை பயன்படுத்தி அமைக்கப்பட்ட சுகாதார மையங்களை அண்மையில் ஜனாதிபதி திறந்து வைத்திருந்தார்.

பருத்தித்துறையில் விபத்துப்பிரிவு, சத்திர சிகிச்சை கூடங்கள், சத்திரசிகிச்சை பிரிவு மற்றும் கதிரியக்கப்பிரிவு(சிரி ஸ்கான் உட்பட ஆகியனவும் - கிளிநொச்சியில் பிரசவ மற்றும் பெண்நோயியல், சிறுவர் பராமரிப்பு சிறப்பு மையம் என்பனவும் - மாங்குளத்தில் உடல், உள மருத்துவ புனர்வாழ்வு வைத்தியசாலையும் - வவுனியாவில் இருதய மற்றும் சிறுநீரக சிகிச்சைப்பிரிவும் - மருத்துவர் சத்தியலிங்கத்தின் முன்முயற்சியினால் சாத்தியமாகியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது



# ரெட்டியார் சங்கத்தின் புதிய பணிமனை கொழும்பில் நேற்றுத் திறந்து வைப்பு!

இலங்கை ரெட்டியார் சங்கத்தின் புதிய காரியாலயம் ஒன்று நேற்று காலை கொழும்பில் உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ஆர். மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற அந்நிகழ்வில் அச்சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் சார்பாக போசகர் என். சீனிவாசகம் (என்.எஸ். வாசு) அவர்களினால் காரியாலயம் திறந்து வைப்படுவத னையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் சிலரையும் படங்களில் காணலாம்.

(படம்: ஸ்ரீ நிவாசகம் இரவீந்திரன்)









# தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் தனி ஒரு கட்சி தீர்மானிக்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் தனி ஒரு கட்சியினால் தீர்மானிக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆரையம்பதி பொதுச்சந்தையில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் கொண்ட கட்டடத்தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழர்களை ஒட்டுமொத்த மாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைமைகள், புத்திஜீவிகள் என அனைவரையும் ஒன்றிணைத்து தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பிலான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும்.

இங்கையின் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படல் வேண்டும். நாடாளுமன்றத் தேர் தல் நடாத்துவதற்கு இன்னும் காலம் இருக்கின்றது. எனவே நாட்டினுடைய அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் முதலிலே ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதுதான் எங்களது எல்லேரினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. அற் கான வேலைத்திட்டங்கள்தான் தற்போது முன்னெடுக்கப்படு கின்றன.

தேர்தல்கள் தொடர்பில் பொதுவாக ஒவ்வொருவருடைய தனிப்பட்ட கருத்துக்களை முன்வைக்கின்றார்களே தவிர அவை உத்தியோக பூர்வமாக அரசாங்கத்தினுடையதோ, அல்லது ஜனாதிபதியினுடைய கருத்தாக இல்லை. ஜனாதிப தியோ, பிரதமரோ, அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ, அது தொடர்பில் உத்தியோக பூர்வமான கருத்துக்களை வெளியிடாத சூழல் காணப்படுகின்றது. ஆனால் தனிப்பட்ட ரீதியான கருத்துக்களாக அவை காணப்படுகின்றன. எது, எவ்வாறாக இருந்தாலும் முதலிலே ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படல் வேண்டும் என்பதுதான் எல்லோருடைய எதிர்பார்ப்பாகவுள்ளது.

நாடு ஒரு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இந்த அளவிற்கு மீளக்கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது.நாணயநிதியம்ஊடனான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந் நிலையில் நாடு மெல்ல மெல்ல பொருளாதாரத்திலே எழுச்சி கண்டு வருகின்றது. அது இன்னும் முழுமை பெறவில்லை. ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் முழுமை பெறும்பொழுது இந்த நாடு இருந்ததை விட இன்னும் சிறப்பாக மேலே வருவதற் குரிய வாய்ப்புக்கள் இருக்கின்றன." - என்றார்





# விவசாயிகளுக்கு நன்றி செலுத்தும் விதமாகவே உறுமய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"காணி உறுதிகள் இல்லாமல் நாட்டு மக்களுக்கு சோறு தந்த விவசாய மக்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவே அரசாங்கத்தினால் உறுமய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மகாவலி வளவ வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 45 ஆயிரத்து 253 பேரில் 1,524 பேருக்கு, அம்பிலிபிட்டி மகாவலி விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"உறுமய திட்டத்தின் காணிகளை வழங்க வேண்டியவர்களுக்கு அடுத்த இரு மாதங்களில் காணிகளை பெற்றுக் கொடுக்குமாறு பணிப்புரை விடுத்திருக்கிறேன். மாவட்டச் செயலாளர்களும், நிள அளவையியல் திணைக்கள அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு அந்தப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

நாட்டில் 75 வருடங்களாக மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. தற்போது சட்டபூர்வமாகவே அந்த உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். இது ஒரு வகையான புரட்சியாகும்.

நாடு என்ற வகையில் அனைவருக்கும் நெருக்கடியான காலம் உருவாகியது. அதனால் அனைவருக்கும் நட்டம் ஏற்பட்டது. இப்போது நாடு நல்ல நிலையை அடையும் வேளையில் அதன் பலன்களும் மக்களை சென்றடைய வேண்டும். குறிப்பாக நாட்டுக்கு சோறு தரும் விவசாய மக்களுக்கு அவை நிச்சயமாகக் கிடைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கியது போலவே கொழும்பு மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புக்களின் வீட்டு உரிமைகள் வழங்கப்படும். அதனால் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வீட்டு உரிமை கிடைக்கும்.

1944 களில் சீ.டபிள்யூ.டபிள்யூ.கன் னங்கரவின் யோசனைக் கமைய மந்திரிகள் சபையின் ஊடாக கல்வி அறிவைப் பகிர்ந்தளித்தோம். சுதந்திர கல்வியால் அந்த அறிவு அனைவருக்கும் பகிரப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அறிவோடு, உரிமையையும் பெற்றுத்தருகிறது.

உங்களால் சிறந்த விளைச்சல் கிடைக்கிறது. ஆனால் உங்களுக்கு உரிமை இருக்கவில்லை. அந்த கஷ்டங்களை 3 பரம்பரைகள் அனுபவித்திருக்கின்றன. இனியும் கஷ்டங்களைத் தரக் கூடாதென அரசாங்கம் தீர்மானித்தது. அதனால் விவசாய மக்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் இந்த உறுமய வேலைத்திட்டம் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டை நாம் பொறுப்பேற்ற வேளையில் எரிபொருள், மருந்து, உணவுத் தட்டுப்பாடு காணப்பட்டது. 2022 – 2023 சிறுபோகத்தில் விளைச்சல் அதிகரித்தது. அதனால் கடவுள் செயலால் இதனைச் செய்ய முடியும் என்று நம்பினோம். விவசாயிகளே அதற்குப் பக்கலமாக நின்றனர். இப்போது விவசாயிகளுக்கான உரம் உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முன்னெடுப்புக்களை ஆரம்பித்துள்ளோம்.

விவசாயிகளுக்காக நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் இத்தோடு நின்றுவிடாது. காணிகளை வழங்குவது மாத்திரம் போதுமானதல்ல. கிராமங்களில் வறுமையை ஒழிக்க விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. காணி உரிமை கிடைப்பதால் மக்கள் தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடியும்.

நீங்கள் அனைவரும் அந்த வேலைத்திட்டத்தின் பங்குதாரர்கள் ஆக வேண்டும். அதற்குத் தேவையான நிதி அடுத்த வருடத்திலிருந்து வழங்கப்படும். வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம். அதனால் விவசாய சேவை நிலையங்களை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. காணி உரிமையின்றி 3 பரம்பரைகளாக சேவையாற்றிய விவசாய மக்களுக்கு நன்றி." – என்றார்.








# பொருளாதார முன்னேற்ற வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் வெற்றிகரமாக செய்துள்ளார்

## இராஜாங்க அமைச்சர் அநூப பஸ்குவெல் தெரிவிப்பு



"கொள்கைகளின் அடிப்படையிலேயே நாட்டை முன்னேற்ற முடியும். அவ்வாறன்றி தனிநபர்கள் அல்லது கட்சிகளினால் அதனைச் செய்ய முடியாது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளார்."

– இவ்வாறு சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநூப பஸ்குவெல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டு மக்களின் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்ட சீர்திருத்தங்களை தற்போதைய அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது. அதற்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்க பலர் முன்வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் அதற்கான கொள்கைகள் எவையும் இல்லை. நாட்டில் பலரும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை ஏற்றுக்கொண்டுள்ளபோது, சிலர் மாத்திரம் அதற்குப் புறம்பாகச் செயற்படுகிறார்கள்.

யார் எவ்வாறு அறிக்கைகளை வெளியிட்டாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் வெற்றியடைந்துள்ளன என்பதே உண்மையாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டுள்ளதுடன் அதனை எவ்வித பிரச்சினைகளும் இன்றி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்த நாட்டில் பொருளாதார முறைமை, பணவீக்கம், சமூக நலன் ஆகிய பிரிவுகளை நோக்கி நகர்கிறது. அரசாங்கம் நலன்புரித் திட்டங்களை ஆரம்பித்தபோது 35 வீதமாக வட்டி விகிதம் இன்று 12 வீதமாக குறைந்துள்ளது.

மேலும் கொள்கைகளின் அடிப்படையில் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். தனிநபர்கள் அல்லது கட்சிகளால் அதனைச் செய்ய முடியாது. கட்சிகள் மற்றும் நபர்கள் மாறுவதால் ஒரு நாட்டின் பொருளாதாரம் மாற்றம் காணாது.

தேர்தல் நேரத்தில் எல்லையின்றி ஊழல் சொத்துக்கள் வந்து சேர்வதைத் தவிர்ப்பதற்காகவே தேர்தல் செலவுச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதனால் ஊழலுக்கு முக்கிய காரணம் தேர்தல் முறை என்று கூறிவிட முடியாது. தற்போது நடைமுறையில் உள்ள விருப்பு வாக்கு முறைமையினால், தேர்தலில் வெற்றிபெற ஒரு வேட்பாளருக்கு குறைந்தது 500 லட்சம் ரூபாய் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே தற்போதுள்ள தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டியது அவசியம்.

அரசின் கொள்கைகள் பிரசித்தமடைந்துள்ளன. அந்த வேலைத்திட்டங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தலைமை தாங்குகிறார் என்பது இரகசியமல்ல. அதனை ஒவ்வொரு துறைசார் நிபுணர்களும், மக்களும், பிற கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 50 வீத நிவாரணத்தை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார். அதற்கு 1.2 பில்லியன் ரூபாய் தேவைப்படுகிறது.

இதனூடாக 1200 ஹெக்டெயரில் புதிதாக தேயிலை நடப்படும். அதற்குத் தேவையான உர மானியத்தை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. பெண்கள் வலுவூட்டலுக்கான ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இதுவும் வரலாற்றில் முதல்முறையாக மேற்கொள்ளப்படும் முயற்சியாகும்." – என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவே முடியாது!

## விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலை எக்காரணம் கொண்டும் மேலும் ஒரு வருடத்திற்கு பிற்போட முடியாது என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று உள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் நீதியமைச்சர் ஊடகங்களுக்கு இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசமைப்பில் உள்ள ஒரு குறைப்பாட்டை பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு பிற்போட முடியும் எனச் சிலர் கூறுகின்றனர்.

அவ்வாறான யோசனை ஒன்றை கடந்த காலத்தில் முன்வைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றின் நிலைப்பாட்டை கேட்டறிந்தார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு பிற்போட முடியாது என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்திருந்தது." – என்றார்.

# சீனக் கடலட்டைப் பண்ணைகளை அமைக்க மீண்டும் நடவடிக்கைகள்

**மீனவ தொழிற்சங்க வட மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவிப்பு**




"சீன நாட்டு கடலட்டைப் பண்ணைகள் ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து அரசாங்கத் தரப்பில் இருந்து அரசியல் காரணங்களுக்காக மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுத் நடாத்திய ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"வடக்கு மாகாணத்தில் – குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் – சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக சீன நாட்டு கடலட்டைப் பண்ணைகள் ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து அரசாங்கத் தரப்பில் இருந்து அரசியல் காரணங்களுக்காக மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஆழமற்ற கடற்பரப்பில் சீன கடலட்டைப் பண்ணைகளை விதைக்கப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 24 ஆம் திகதி வடக்கிற்கு மீண்டும் விஜயம் மேற்கொள்ள இருகின்றார் என அறிகின்றோம்.

ஜனாதிபதி அவர்களே, உங்களுடைய தேர்தல் அல்லது அரசியல் இருப்புக்காக கடற்றொழில் சமூகமாகிய எங்களையும் எங்களது கடலையும் நீங்கள் அழிக்காதீர்கள். அரசியல் ஆதாயத்துக்காக குறிப்பிட்ட கடற்றொழில் சமூகத்தை தூண்டிவிட்டு சீன நாட்டு கடலட்டை பண்ணைகளை வடக்கு கடலில் மீண்டும் கொண்டுவருதற்கான முயற்சியில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஈடுபட்டு வருக்கின்றமையை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். எமது எதிர்ப்பினையும் மீறி நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் கடந்த காலத்தைப் போல தீவிரமாக கடற்றொழில் சமூகம் அதற்கு எதிராக போராடும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜனாதிபதி அவர்களே, வடக்கின் அபிவிருத்திக்கோ, முதலீட்டுக்கோ நாங்கள் தடையானவர்கள் அல்லர். ஆனால் உங்களுடைய ஆட்சிக்காலத்தில் தான் வடக்கு கடலிலே சட்டவிரோதமான செயற்பாடுகளும் முறையற்ற முதலீடுகளும் நடைபெறுகின்றன. குறிப்பாக ஜனாதிபதிக்குக் கீழே செயற்படுகின்ற நாரா மற்றும் நெக்ரா நிறுவனங்கள் வடக்கு கடலில் எத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள்? ஆய்வுகளின் அடிப்படையில் தான் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். தொடர்ச்சியாக பரீட்சார்த்தமாக அல்லது தழுவல் என்ற அடிப்படையிலேயே ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை அனுமதிப்பதன் மூலம் எங்களுடைய இருப்பையும், கடலையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் அழித்து வருகிறார்.

நேற்று (16 ஆம் திகதி) மன்னாருக்கு சென்றிருந்த ஜனாதிபதியிடம் மன்னார் ஆயர் வடக்கு கடற்றொழிலாளர்களது பிரச்சினை குறித்தும் கவனமெடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். நாங்களும் பல சந்தரப்பங்களில் கோரிக்கை வைத்தாலும் ஜனாதிபதி மௌனமாகவே உள்ளார். வடக்கில் உள்ள அதிகாரிகளும் கண்டுகொள்வதில்லை. துறைக்கு பொறுப்பான அமைச்சரிடம் தெரிவித்தும் பதில் இல்லை. நாடாளுமன்ற மேற்பார்வை குழுவிலும் எங்களது பிரச்சினை குறித்து எடுத்துசொல்லும் போது இந்த நடவடிக்கைகள் பிழை என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், நடவடிக்கை இல்லை. அப்படி என்றால் நாங்கள் யாரிடம் செல்வது?

வடக்கு கடலிலே நாரா நிறுவனம் கடலட்டை பண்ணைகள் அமைப்பது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தால் அது தொடர்பில் வடக்கு விஜயத்தின் போது ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும். அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கு கடலில் மீண்டும் கொண்டுவரப்படும் சீன கடலட்டை பண்ணைகள் எங்களை அழிக்கின்ற செயற்பாடாகும். உங்களது அரசியல் இருப்புக்காக எங்களுடைய பாரம்பரிய மீனவர்கள் அன்றாடம் உழைத்து வாழுகின்ற கடலில் எவ்வித ஆய்வுகளும் இன்றி எவ்வித நடவடிக்கைகளும் முதலீடுகளும் செய்யக்கூடாது என ஜனாதிபதி அவர்களிடம் தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

வடக்கு மாகாணத்திலே குறிப்பாக தீவகப்பிரதேசங்களிலே கடலட்டைப் பண்ணைகள் அதிகமாக இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களது வாழ்வாதாரத்திலே பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உண்பதற்கு கூட மீனில்லாத நிலை. தகரத்திலே அடைக்கப்பட்டு வரும் ரின் மீனையும் நெத்தலி கருவாட்டினையும் உண்ணும் நிலையைத்தான் இன்று கரையோ மக்களுக்கு ஜனாதிபதி உருக்கியிருக்கின்றார்.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் அம்மணி அவர்களிடமும் மீனவர் சமூகம் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் வலியுறுத்தி வருகின்றோம். நாரா நிறுவனம் வடக்கு கடற்றொழில் சமூகத்திற்கு மிகப்பெரும் துரோகத்தை செய்து வருகிறது. அதனை ஆளுநரான நீங்களும் பார்த்துக் கொண்டுதான் உள்ளீர்கள். கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டு சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் திணைக்களம், பொலிஸ், கடற்படை, கிராம அலுவலர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்று விசேடமாக அமைக்கப்படுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கும் இதே ஆளுநர்தானே இணைத்தலை வகிக்கின்றார். அப்படி என்றால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்த ஏன் அவர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை? கடற்றொழிலாளர்களது விடயத்தில் ஆளுநரின் மௌனத்திற்கு காரணம் என்ன? யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள எங்களுக்கு நீங்கள் ஆளுநர் இல்லையா? முல்லைத்தீவுக்கு மட்டும்தானா நீங்கள் ஆளுநர்? வடக்கு மாகாணத்தில் ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள். முல்லைத்தீவில குழு அமைக்கும் ஆளுநர் யாழ்ப்பாணத்தில் மௌனம் காக்கின்றார். தற்போதைய வடக்கு மாகாண ஆளுநரான அம்மணஜ் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களுடைய காலத்திலே தான் வடக்கு கடற்றொழில் சமூகம் மிகப்பெரும் பாதிப்புகளையும் சொல்லொணாத் துயரங்களையும் சந்தித்து வருகின்றோம்." – என்றார்

# அ.தி.மு.கவில் சசிகலா மீண்டும் நுழைய முடியாது; முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் திட்டவட்டம்



அ.தி.மு.கவில் சசிகலா மீண்டும் 'என்ட்ரி' கொடுக்க முடியாது என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சென்னை பட்டினப்பாக்கத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்,

"விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணித்தது குறித்து தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பொதுமக்களை பட்டியில் அடைத்தது போன்று அடைத்து, ஜனநாயக படுகொலையை தி.மு.க. செய்தது. தேர்தல் ஆணையம் நேர்மையான தேர்தலை நடத்தினால் நாங்கள் போட்டியிட தயார். தேர்தல் ஆணையத்தால் தேர்தலை நேர்மையாக நடத்துவோம் என உறுதியளிக்க முடியுமா?. அதனால் தான் இடைத் தேர்தலை புறக்கணிக்கிறோம். அ.தி.மு.க. எப்போதும் புறமுதுகு காட்டுவதில்லை. எப்போதும் அ.தி.மு.கவுக்கு வெற்றி தான்.

இந்தத் தேர்தலில், அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டு, ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அத்தனை பேருமே விக்கிரவாண்டியில் முகாமிடுவார்கள். பணபலம், ஆட்பலம், அதிகார துஷ்பிரயோகத்தைப் பிரயோகப்படுத்துவார்கள். அதனால் இந்தத் தேர்தலில் போட்டியிடுவது அதிமுகவுக்கு சக்தி, காலம், பணம் அனைத்தும் வீண்.

இந்தத் தேர்தலில் தி.மு.கவின் அநியாயம், அக்கிரமம், அராஜகம் அனைத்தும் அரங்கேறும். அதனால் தேர்தல் புறக்கணிப்பு முடிவை எடுத்தோம்.கட்சி நிர்வாகிகள் கூடி எடுத்த முடிவை, காலம் காலமாக இரட்டை இலைக்கு வாக்களித்த தொண்டர்களும், பொதுமக்களும் கடைபிடிப்பார்கள். அவர்களின் கை வேறு சின்னத்துக்கு வாக்களிக்காது. அவர்களும் தேர்தலை புறக்கணிப்பாளர்கள்.

சசிகலாவும், அவரது குடும்பமும் ஜெயலலிதாவால் வெளியேற்றப்பட்டவர்கள். சசிகலாவை மட்டும் ஜெயலலிதா திரும்ப சேர்த்துக் கொண்டார். அவர் கட்சியிலேயே இல்லை. அவருக்கும் அ.தி.மு.கவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தொண்டர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத சசிகலாவை பொது மக்கள் எப்படி ஏற்பார்கள். "எக்சிட்" ஆனவரால் "என்ட்ரி" கொடுக்க முடியாது.

சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து எல்லா சமூகத்துக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து சமத்துவ கட்சியாக அதிமுக செயல்பட்டு வருகிறது. இதைப் பார்த்து பொறுக்க முடியாதவர்கள் மலிவான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

குழப்பவாதி, சந்தர்ப்பவாதி, சுயநலவாதியான ஓ.பன்னீர் செல்வத்தை மக்கள் ஏற்கமாட்டார்கள். அரசியலில் அவர் ஒரு குறுநாவல். அ.தி.மு.க. வரலாற்றுச் சரித்திரம். தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு வாக்கு சதவீதம் ஏறவே ஏறாது. பா.ஜ.கவுக்கு தமிழகத்தில் இடமே கிடையாது." – என்றார்.

# ராகுல் விலகும் வயநாடு தொகுதியில் பிரியங்கா காந்தி போட்டியிடுகின்றார்

## காங்கிரஸ் கட்சி அறிவிப்பு



வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி இராஜினாமா செய்வார் என்றும் அந்தத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரியங்கா காந்தி போட்டியிடுவார் எனவும் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே அறிவித்துள்ளார்.

டில்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தலைமையில் அக்கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் கார்கே, ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது கார்கே கூறுகையில்,

"ராகுல் காந்தி ரேபரேலி தொகுதி எம்.பியாக தொடர வேண்டும் என்று கட்சி முடிவு செய்துள்ளது. காரணம், இது பல தலைமுறைகளாக அவரது குடும்பத்துக்கு நெருக்கமான தாக உள்ளது. இந்த முடிவையே அத்தொகுதி மக்களும், காங்கிரஸ் கட்சியினரும் சிறந்ததாக கருதுகின்றனர்.

ராகுல் காந்தி வயநாடு தொகுதி மக்களின் மிகுந்த அன்பைப் பெற்றுள்ளதால், அம்மக்களும் அவர் அந்தத் தொகுதியில் தொடர வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், விதிகள் அதற்கு அனுமதிப்பது இல்லை. எனவே, பிரியங்கா காந்தி வயநாடு தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று கட்சி முடிவு செய்துள்ளது," என்றார்.

இதைத்தொடர்ந்து பேசிய பிரியங்கா காந்தி, "நான் ஒரு பெண். என்னால் போராட முடியும். என்னால் வயநாட்டில் இருந்தும் போராட முடியும்" என்று கூறினார்.

பின்னர் பேசிய ராகுல் காந்தி, "எனக்கு ரேபரேலி மற்றும் வயநாடு ஆகிய தொகுதிகளுடன் உணர்வுபூர்வமான தொடர்பு இருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டு காலம் வயநாடு எம்பியாக இருந்தபோது, அத்தொகுதி மக்கள் என் மீது காட்டிய அன்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிரியங்கா காந்தி வயநாட்டில் போட்டியிடுவார். ஆனால், நானும் அங்கு அடிக்கடிச் செல்வேன். அந்தத் தொகுதி மக்களுக்காக கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவோம் .

ரேபரேலி தொகுதியுடன் எனது தொடர்பு பழமை வாய்ந்தது. அந்தத் தொகுதியை பிரதிநிதிப்படுத்துவதில் எனக்கு மகிழ்ச்சி. இருந்தாலும், இந்த முடிவு எளிதானது அல்ல, கடினமானது. வயநாடு தொகுதி மக்கள் என்னுடன் நின்று என்னை ஆதரித்தனர். மிகவும் கடுமையான நேரத்தில் போராடுவதற்கான ஆற்றலை எனக்கு கொடுத்தனர். வயநாடு மக்களுக்காக நான் எப்போதும் தயாராக இருப்பேன்," என்று அவர் கூறினார்.

முன்னதாக, நடந்த முடிந்த மக்களவை தேர்தலில் காங்கிரஸின் முக்கியத் தலைவரான ராகுல் காந்தி இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். கேரளாவின் வயநாடு தொகுதி எம்.பியான ராகுல் அங்கு மீண்டும் போட்டியிட்டார். இதன் வாக்குப்பதிவு முடிந்த நிலையில் அவர், உத்தரப் பிரதேசத்தின் ரேபரேலியிலும் வேட்புமனு தாக்கல் செய்தார். இதன் முடிவுகளில் ராகுல் இந்தியாவின் ஒரே வேட்பாளராக இரண்டு தொகுதிகளிலும் வெற்றிபெற்றார்.

வயநாடு தொகுதியில் ராகுல், சி.பி.ஐ. வேட்பாளர் ஆனி ராஜாவை 3 லட்சத்து 64 ஆயிரத்து 422 வாக்குகளில் வெற்றி பெற்றிருந்தார். உத்தரப் பிரதேசத்தின் ரேபரேலியில் அவர் பா.ஜ.கவின் தினேஷ் பிரதாப் சிங்கை 3 லட்சத்து 90 ஆயிரத்து 30 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றிருந்தார். காங்கிரஸ் வேட்பாளராக இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்ற ராகுல் காந்தி, ரேபரேலி தொகுதி எம்.பியாக தொடரவும், கேரளாவின் வயநாடு தொகுதியை இராஜினாமா செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி இருந்த நிலையில், அந்த தகவல் தற்போது உறுதியாகி உள்ளது.

# பல லட்சம் கோடி ரூபாக்களை செலவிட்டு ஆணு ஆயுதங்களைத் தயாரித்த நாடுகள்!





உலக நாடுகள் சில கடந்த 2023 ஆம் ஆண்டில் அணு ஆயுதத்திற்காக இந்திய ரூபாய் மதிப்பில் 7.6 லட்சம் கோடி வரை செலவிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியா, சீனா, பிரான்ஸ், இஸ்ரேல், வடகொரியா, பாகிஸ்தான் , ரஷ்யா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளே அணு ஆயுதத்திற்காக இவ்வாறான தொகையை செலவிட்டதாக சர்வதேச அணு ஆயுத ஒழிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஒரு நிமிடத்திற்கு 1.4 கோடி ரூபாயும், ஒரு நொடிக்கு 2.4 லட்சம் ரூபாயும் உலக நாடுகள் செலவிடு வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தத் தொகையில் அதிகபட்சமாக அமெரிக்கா 4 லட்சம் கோடி ரூபாய் வரை அணு ஆயுதத்திற்கு செலவு செய்ததாகவும், இது மற்றைய அனைத்து நாடுகளின் மொத்தத் தொகையை விட அதிகம் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு மட்டும் அணு ஆயுதத்திற் கான செலவை அமெரிக்கா 80 வீதம் அதிகப்படுத்தியி ருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு அடுத்ததாக சீனா 1 லட்சம் கோடி ரூபாய் வரை ஒதுக்கியுள்ளதாகவும், அதற்கடுத்து ரஷ்யாவும், பிரித்தானியாவும் தோராயமாக 70 ஆயிரம் கோடி ரூபாய் வரை ஒதுக்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள் ளது.

இதில், இந்தியா 19 ஆயிரம் கோடி ரூபாய் வரை அணு ஆயுதத்திற்கு செலவிட்டுள்ளதாகக் கூறப்படுவதுடன் அயல் நாடான பாகிஸ்தான் 7.5 ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவிட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், அணு ஆயுதத்திற்காக உலக நாடுகளால் 32 இலட்சம் கோடி ரூபாய் வரை செலவு செய் யப்பட்டுள்ளதாக ஐ.சி.ஏ.என். தெரிவிக்கிறது.

அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் 9 நாடுகளும் நவீன மயமாக்கப்பட்டு வருவதால் அணு ஆயுதத்திற்கான செலவுகளையும் அதிகப்படுத்தி வருகின்றதாக தெரிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# போருக்கான அமைச்சரவையை கலைத்தார் இஸ்ரேலிய பிரதமர்

காசா மீதான போர் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க, அமைக்கப்பட்டிருந்த மத்திய அமைச்சரவையை கலைப்ப தாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறி வித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பு, மேற்காசிய நாடான இஸ்ரேலில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இதில், 1,200 பேரை கொன்றதுடன், அங்கு நடந்த இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற 250 இற்கும் மேற்பட் டோரையும் கடத்தி சென்றது.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் ஹமாசுக்கு எதிராக போர் பிரகடனம் செய்து காசா மீது தாக்குதல் நடத்தி வருகி றது

இந்த நிலையில் போர் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க, அனைத்து கட்சிகள் அடங்கிய ஆறு பேர் கொண்ட மத்திய அமைச்சரவை அமைக்கப்பட்டது.

அமைக்கப்பட்டிருந்த மத்திய அமைச்சரவையை கலைப் பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று அறிவித்தார்.

முன்னாள் ஜெனரல் பென்னி காண்ட்ஸ் அமைச்சரவை யிலிருந்து வெளியேறிய நிலையில் நெதன்யாகு இந்த முடிவை எடுத்துள்ளார்.

காசா மீதான போருக்கு பிந்திய திட்டம் தொடர்பாக இஸ் ரேல் பிரதமருக்கும், போர் அமைச்சரவை அதிகாரிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

# நாடு முழுவதிலும் நேற்று இஸ்லாமிய சகோதரர்கள் ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகையில்

ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகை இலங்கையில் இஸ்லாமியர்கள் வாழும் பல்வேறு இடங்களில் நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது

பிரதேசங்கள் தோறும் நடைபெற்ற பெருநாள் தொழுகைகளில் பல்லாயிரக்கணக்காகன இஸ்லாமிய மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொண்டனர் .

இதனை தொடர்ந்து தமது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளும் முகமாக உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அயலவர்களின் வீடுகளுக்கும் அவர்கள் மாறி மாறிச் சென்றனர். பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டமையோடு உணவு பண்டங்களை பகிர்ந்து மகிழ்ந்தனர்.

## கல்முனை ஹு தா திடலில்...!

(எஸ்.அஷ்ரப்கான், அஸ்ஹர் இப்றாஹிம்)

புனித ஹஜ் பெருநாள் நபிவழித் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றன.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அஷ்-ஷேய்க் ஆஷிக் இஸ்மாயில் (ஸலபி) அவர்கள் நிகழ்த்தினார்.

ஆயிரக்கணக்கான மக்கள் இப்புனித ஹஜ் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டமையுடன் பலஸ்தீன காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.






















# மருதமுனை கடற்கரை திறந்த வெளியில்...!

(ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான்)

மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்றுக் காலை 6:15 மணிக்கு நடைபெற்றது.

இம்முறை கடற்கரை திறந்தவெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) நடாத்தினார். ஆண்கள், பெண்களுக்கு வெவ்வேறாக இட வசதிகள் ஒதுக்கப்பட்டு தொழுகை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன் மண்ணில் அப்பாவி சிறுவர்கள் படு கொலை செய்யப்படுவதைக் கண்டித்து இந்த ஹஜ்ஜுப் பெருளாள் தினத்தில் அனைவரும் பிராத்தனை செய்ய வேண்டும் என இங்கு குத்பா பிரசங்கத்தை நிகழ்த்திய மௌலவி பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.













# மாளிகைக்காடு, சாய்ந்தமருதில்...!

(நூருல் ஹுதா உமர், எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை ஒட்டிய குத்பா பிரசங்கத்தைந் ஜும்மா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது அல்- அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள் தோட்ட திடலில் இடம்பெற்றது. இங்கும் பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலில் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டன.

ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல். எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.











# பாலமுனையில்.....!

(எம்.எம்.றம்ஸீன்,எம்.ஏ.ஏ.அக்தார்)

ஹஜ்ஜுப் பெருநாள் திடல் தொழுகை பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

பாலமுனை ஸஹ்வா ஆண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெஃ ஏ.ஆர்.றமீன் (மதனி) அவர்களால் தொழுகை நடத்தப்பட்டு குத்பா பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

பாலமுனை றியாழுல் ஜன்னாஹ் ஜும்மா பள்ளி வாசல் ஏற்பாடு செய்த பெருநாள் தொழுகை பால முனை அல் ஹிக்மா கல்லூரி மைதானத்தில் இடம்பெற் றது.

அஸ்ஷேக் ஐ.எல்.எம். ஹாஷிம் அவர்களால் தொழுகை மற்றும் குத்பா பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது









# அட்டாளைச்சேனையில்....!

(சியாத்.எம்.இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை மஜ்ஜிதுல் தஃவா பள்ளிவாயல் ஏற்பாட்டில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் (ஈதுல் அழ்ஹா) தொழுகை மற்றும் பேருரை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை 6.25 மணிக்கு நடைபெற்றது.

இந்த ஹஜ் பெருநாள் தொழுகை மற்றும் பேருரையை மௌலவி என்.எம்.அப்துல் அஹது (ஷர்க்கி) நிகழ்த்தினார். இதில் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# காத்தான்குடியில்....!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை காத்தான்குடி கடற்கரையில் இடம்பெற்றது. தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் ஹாலிதீன் ஹாபிழ் நடாத்தினார்.





# கிண்ணியாவில்....!



(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி கிராமசபை மைதானத்தில் நேற்றுக் காலை ஹஜ் பெருநாள் திடல் தொழுகை இடம் பெற்றது. இதில் பெரும்பாலானவர்கள் தொழுகையில் கலந்து கொண்டதுடன் குத்பா பிரசங்கமும் இடம் பெற்றது. திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# தோப்பூரில்......

(எம்.எம்.நௌபீக்)

புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை தோப்பூர் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் நேற்று சிறப்பாக நடத்தப்பட்டது.

காலை 6.30 மணிக்கு பெண்களுக்கான தொழுகையும், 7.30 மணிக்கு ஆண்களுக்கான தொழுகையும் இடம்பெற்றன.

ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்தப்பட்டதை அடுத்து தொழுகை நடத்தப்பட்டு விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.

தோப்பூர் பிரதேசத்தில் மரபு ரீதியாக திடலுக்குச் சென்று தொழுவதை தவிர்த்து பள்ளிவாசல்களிலே பெருநாள் தொழுகைகள் இடம்பெறுஅகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# புத்தளத்தில்.....!

(ரஸீன் ரஸ்மின், எம்.எச்.எம்.சியாஜ்)

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு, புத்தளம் இஸ்லாமிய கலாச்சார நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த பெருநாள் தொழுகையும், குத்துபா பிரசங்கமும் நேற்றுக் காலை 6.45 மணியளவில் புத்தளம் சாஹிரா தேசியக் கல்லூரி கறுப்புத் தரவை மைதானத்தில் இடம்பெற்றது.

பெருநாள் தொழுகை மற்றும் குத்பா என்பனவற்றை புத்தளம் இஸ்லாஹியா அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.மின்ஹாஜ் (இஸ்லாஹி) நடத்தினார்.

மேற்படி பெருநாள் தொழுகையில் கலந்துகொண்ட அனைவரும் ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்து கொண்டு பெருநாள் வாழ்த்துக்களை பகிர்ந்துகொண்டனர்.









# கற்பிட்டியில்.....!

(எம்.எச்.எம்.சியாஜ் )

கற்பிட்டி அனைத்துப் பள்ளிவாசல்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்த ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகையும் கொத்துபாவும் நேற்றுக் காலை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

கற்பிட்டி அஹதிய்யா பாடசாலையின் மௌலவி ஆசிரியர் அபூபக்கர் கொத்துபா பேருரையையும் நியாஸ் ஹாபிஸ் தொழுகையையும் நடாத்தி வைத்தனர்..






# மன்னாரில்...!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்திலும் இஸ்லாமியர்களால் ஹஜ் பெருநாள் நிகழ்வுகள் நேற்றுத் திங்கட்கிழமை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் மூர்வீதி ஜ/ம்மா பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றது. காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம் பெற்றது.

இவ் தொழுகை மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம்.அஸீம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கியத்துவம், அல்குர்ஆன் சமய நற்சிந்தனைகள், பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் விசேடமாக துவா தொழுகையும் இடம் பெற்றது.

மாவட்டத்தில் உள்ள ஏனைய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.








# இன்றைய ராசி பலன்கள் - 18.06.2024




இன்று வளர்ச்சி காண்பீர்கள். இன்று பல பயனுள்ள விஷயங்களை செய்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் பிறரைக் கவரும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிக்கான நன்மதிப்பும் அங்கீகாரமும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இன்று நீங்கள் முக்கிய முதலீட்டு முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் எச்சரிக்கையும் தேவை. எதிர்பாரதவைகளைச் சந்திப்பீர்கள்.

பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். பணயில் வெற்றி காண புத்திசாலித்தனம் மற்றும் திறமைகளைபயன்படுத்துங்கள். எந்த சூழ்நிலையிலும் பதட்டமடையாதீர்கள். அதனால் உங்கள் ஆற்றல் குறைந்து விடும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருவரும் பிரச்சினைகளை தீர்க்க கலந்து ஆலோசிக்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் திருப்தி கிடைக்கும்.

இன்று நிதிநிலை சுமாரான பயனைத் தரும். வரவும் செலவும் சமமாக யாருக்கும். நீங்கள் யோசித்துச் செயல்பட வேண்டும்.

இன்று முடிந்த அளவு அனுசரணையாக அமைதியாக இருக்கவும். உங்களுக்குத் தெரிந்த அளவில் விஷயங்களை தைரியமாக கையாளுங்கள். உங்களுக்கு லேசாக தலைவலி காணப்படும்.




இன்றைய நாள் வெற்றிகரமாக அமைய பொறுமையும் அமைதியும் தேவை. பதற்றப்படாமல் சகஜமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் நீங்கள் சில கஷ்டங்களை சந்திக்க நேரும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேச வேண்டும். அதன் மூலம் அவர் உங்கள் மதிப்பை உணர்ந்து கொள்வார். நல்லுறவு ஏற்பட சரியான விதத்தில் உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும். எதிர் காலத்துக்கென சேமிக்கும் பழக்கம் கொண்டிருந்தால் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

எந்தச் சூழ்நிலையிலும் பதற்றமடையாதீர்கள். உங்கள் ஆரோக்கியத்தை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை மேம்படுத்த வேண்டும்.பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் செயல்களில் தாமதங்களை சந்திக்க தயாராய் இருங்கள். திட்டமிடவேண்டியது அவசியம்.

சாதரணமாக ஆற்றும் பணிகளை விட இன்று சற்று கூடுதலான பணிகள் காணப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தவறில்லாமல் கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சம்பாத்தியம் குறைந்து காணப்பட்டாலும் நீங்கள் சேமிக்கும் பழக்கம் கொள்வீர்கள். சேமித்த பணம் பற்றாக்குறை சமயத்தில் பலன் தரும்.

உங்களுக்கு தொண்டை வலி ஏற்படாமல் இருக்க குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அனுகூலமான நாள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் காணும் நாள். உங்கள் சுய உந்துதலும் முயற்சியும் வெற்றியை பெற்றுத் தரும் நாள். உங்கள் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் நாள்.

உங்களுக்கு இன்று பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு வெளிச்சத்திற்கு வரும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறைந்த நேரத்தில் தரமாக பணிகளை முடித்து தருவீர்கள்.

உங்கள் அன்பில் உங்கள் துணை மயங்குவார். அவருக்கு கிடைத்த முக்கியத்துவத்துக்கு மகிழ்ச்சியடைவார். இதன் மூலம் உறவு வலுப்படும்.

உங்கள் நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

நீங்கள் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேற காத்திருங்கள்.

யாரும் உங்கள் பணிகளை கவனிக்காவிட்டாலும் தரமான பணிகளை வழங்குங்கள். உங்கள் பணிக்கான பாராட்டு இப்பொழுதில்லாவிட்டாலும் பிறகு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் பழகும் போது பொறுமை தேவை. நட்புடன் அவருக்கு விஷயங்களை புரிய வைக்க வேண்டும். உங்கள் உறவின் மகிழ்ச்சி முழுதும் உங்கள் கைகளில் தான் உள்ளது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய முடிந்த அளவு செலவை கட்டுப்படுத்த வேண்டும்.

தோல் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதால் இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ணாதீர்கள்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும். முக்கிய முடிவுகளை வேறு சமயத்துக்குத் தள்ளிப் போடுங்கள். உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தரமானதாக குறித்தநேரத்தில் வழங்குவது உங்கள் கைகளில் தான் உள்ளது.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடுங்கள். கவனச்சிதறலின்றி பணியாற்றுங்கள்.

உங்கள் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய இருவரும் சமமாக பொறுப்பேற்று செயல்பட வேண்டும். இருவரும் நட்புடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும்.

பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ அந்த அளவு பாதுகாப்பாக இருப்பீர்கள். அஜாக்கிரதை காரணமாக பணம் இழக்க வாய்ப்பு அளிக்காதீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அடிக்கடி உடற்பயிற்சி செய்யவும். முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்களை எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இன்று தவறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்றவும். அர்ப்பணிப்புடன் பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுங்கள்.

இருவரும் எப்பொழுதும் உங்கள் கருத்துகளை சிறப்பாக பரிமாறிக் கொள்ள வேண்டும். எதைச் சொல்வதாக இருந்தாலும் அன்பாக அமைதியாக கூற வேண்டும்.

பணம் வந்து போகும். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

ஆரோக்கியமில்லாத உணவை உண்ணாதீர்கள். எண்ணெய் மற்றும் கார உணவுகள் உங்கள் முகத்தின் தோலை பாதிக்கும். முகத்தை அடிக்கடி தண்ணீரில் கழுவுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.06.2024

## தனுசு

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் உங்களை முன்னேற்றும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியை பாராட்டுவார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சொல்லிலும் செயலிலும் உங்கள் துணையிடம் நீங்கள் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவர் மகிழ்வார். உறவு வலுப்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று நிதிநிலை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் விருப்பபடி அனைத்தும் நடக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதிபலிக்கும்.

## கும்பம்

இன்றைய நாள் அமைதியாக இருக்க பிரார்த்தனைமற்றும்தியானம்மேற்கொள்ளுங்கள். அனைத்து சூழ்நிலைகளையும் நீங்கள் சமாளிக்க தியானம் உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணியாற்றும் பாணியில் கவனமாக இருங்கள். பணிகள் சிறிது அதிகமாக காணப்படும். அதனை நம்பிக்கையுடன் எற்றுக் கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள்.

உங்கள் இருவரிடையே சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் தெளிவு தேவை. இதன் மூலம் இருவர் உறவிலும் ஆர்வம் குறையாமல் இனிமை நிறைந்திருக்கும்.

ஏழைக்கு பண உதவி செய்வதன் மூலம் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் நல்ல பலன் கிடைக்கும். முன்னோர்களின் சாந்திக்கு சடங்குகள் செய்ய பணம் செலவழிப்பீர்கள். அவர்களின் ஆசி உங்களுக்கு எப்பொழுதும் கிட்டும்.

அதிக தண்ணீர் குடிப்பதும் எண்ணெய் பதார்த்தங்கள் தவிர்ப்பதும் உங்கள் ஆரோக்கியத்திற்கு சிறந்தது. ஆரோக்கியத்தை கவனிக்காமல் விட்டால் தோல் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்படும்.

## மகரம்

இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளைதைரியமாகமேற்கொண்டுசிறப்பாக ஆற்றுங்கள். உங்கள் திறமைகளை காட்டுவதில் முனைப்பாக இருப்பதன் காரணமாக இன்று முழுவதும் பணியில் மூழ்கி இருப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் கட்டுப்பாடுடனும் பக்குவமாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு செழிப்பாக இருக்கும். இன்றைய நாளை மறக்க முடியாத நாளாக ஆக்க இருவரும் வெளியிடங்களுக்குச் சேர்ந்து செல்லுங்கள்.

இன்று நிதிநிலையில் நம்ப முடியாத அளவு பலன் இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## மீனம்

வாழ்வில் உங்கள் பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை ஏற்படுத்தும்.குழப்பம் ஏற்படாதபடி தெளிவான இலக்குளை அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிக்கு இப்பொழுது சிறந்த அங்கீகாரம் கிடைக்காது. என்றாலும் நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் நீங்கள் நினைத்ததைவிட விரைவில் அங்கீகாரம் பெறுவீர்கள். நல்ல நேரம் காத்திருக்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்களை நீங்கள் உற்சாகப் படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேசுங்கள். பக்குவமாகவும் நட்புடனும் நடந்து கொண்டால் நல்ல புரிந்துணர்வு வளரும்.

உங்கள் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்க பரிகாரம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இறைவழிபாடு மற்றும் சிறப்பான திட்டம் மூலம் செலவுகளை கட்டுப் படுத்தலாம்.

இன்று சளி அல்லது இருமல் ஏற்படலாம். பருவநிலை கேற்ற உணவை உட்கொள்ளுங்கள். மிகவும் குளிர்ச்சியான பதார்த்தங்களை உண்ணாதீர்கள்.

